# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

Western India Mission

## செய்திமலர் டிசம்பர் - 2022

### கிறிஸ்தேசுவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியில்? தோள் கொடுக்கும் அன்புப் பங்காளர்களே

கிறிஸ்துவின் பிறப்பு நல்வாழ்த்துக்கள்! இந்த வருஷத்தின் கடைசிமாதத்தைக்காணச் செய்த தேவாதி தேவனுக்கு நன்றிகளையும், துதி ஸ்தோத்திரங்ளையும் ஏறெடுக்கிறோம். இந்த ஆண்டில் இதுவரை தேவன் செய்த எண்ணிமுடியாத அற்புதங்களுக்காக அவருக்கு நன்றி பலிகளை ஏறெடுப்போம்.

வரலாற்றில் பிறந்தவரை வருடமொரு முறை கொண்டாடுவதா, அல்லது வருடமுழுவதும் பிறந்துவிட்டவரை வருட இறுதியில் கொண்டாடுவதா, அல்லது பாலகனாய் பிறந்திட்டவரை நியாயாதிபதியாக அல்ல, பாலகனாகவே நினைத்து ஆராரோ பாடிடக் கொண்டாடுவதா, பாவப் பாரங்களை நீக்கி, பரிசுத்த வாழ்வளிப்பவரை பாசமாய்ப் பார்த்திடவா, உபகாரங்கள் பல செய்பவரை உதவிப் பெறுபவராகவே பார்த்திடவா!

"ஆகையால் நீங்கள் உலகமெங்கும் போய் சுவிஷேசத்தை அறிவியுங்கள்" என்று இயேசுவானவர் நமக்கீந்த அன்பின் கட்டளைகளை மறந்தும், அவர் நமக்கு தந்த போதனைகளை மறந்தும் வெறும் பட்டாசு, நவநாகரீகமான புத்தாடைகள் அணிந்து ஆலயம் சென்று, தான் எவ்வளவு சிறந்தவன் என்று தம்பட்டம் அடித்து, இயேசுபாலனை வெறும் வாய் வாழ்த்துப் பாடிடவா? இல்லை. என்னில் பிறந்து, என்னை அவரில் இணைத்து என் வாழ்வில் அவர்போல் தாழ்மையின் ரூபமானாலும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அறிக்கையிட்டு, அறியாதோர் அறிய, காணாதோர் காண அர்ப்பணித்துக் கொண்டாடுவதே கிறிஸ்மஸ் சிறப்பு விழா. பொருள் பட கொண்டாடி, பொன்னாளின் அனைத்து நன்மைகளையும் நிறைவாய்ப் பெற்றிடுவோமாக!



டோக்கர்வாவில் நடைபேற்ற கூடுகையில் பாரத்தோடு ஜெபிக்கும் மக்கள்

# கிறஸ்து பிறப்பு நற்செய்தி

புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தின் முதல் அதிகாரமே கிறிஸ்மஸ் தான். ஆம்! அவரின்றி புதிய ஏற்பாடும் இல்லை. மத்தேயு 2:1-10 வசனங்களை கிறிஸ்து பிறப்பின் தியானத்துக்காக எடுத்துக்கொள்வோம். இதில் வரும் நட்சத்திரம் நமக்கு நல்ல பாடங்களை கற்றுத்தர கர்த்தர் உதவுவாராக. பரிசுத்த வேதத்தில் பல இடங்களில் நட்சத்திரங்களைக் குறித்த குறிப்புகள் உண்டு. நட்சத்திரங்களை தேவன் இரவை ஆள படைத்தார். அவைகளுக்கெல்லாம் பெயரிட்டிருக்கிறார். அவகைளை எண்ணியிருக்கிறார். முற்பிதாக்களுக்கு அடையாளமாய் நட்சத்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசாளும் ராஜா, இயேசு கிறிஸ்து – விடிவெள்ளி நட்சத்திரம் என்றும் பலவகை குறிப்புகள், கருத்துக்கள், கற்றுத்தரும் உண்மைகள் உண்டு. இருப்பினும் இந்த கிறிஸ்மஸ் சூழலில் நட்சத்திரம் உணர்த்தும் மூன்று உண்மைகளை கற்றுக்கொள்வோம்.

மத்தேயு 2ம் அதிகாரம் கூறும் நட்சத்திரம் பிரகாசித்தது, நகர்ந்தது, வழிகாட்டியது, முன் சென்றது மற்றும் நின்றது போன்ற பல வினைச்சொற்களுடன் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனால் படைக்கப்பட்ட நட்சத்திரம், தேவனின் செயலுக்காக, தேவ செயலை மானிடருக்கு வெளிப்படுத்துவதற்காக தனக்குக் குறிக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து நகருகிறது. அதைக் கண்டவர்களுக்கு. 'ராஜா பிறந்திருக்கிறார்' எனும் தலைப்புச் செய்தியை குறிப்பால் உணர்த்துகிறது. அந்தநட்சத்திரத்தைக் கண்ட சாஸ்திரிகள், உணர்ந்த உண்மையை கண்டிட வழிகாட்டி, முன் சென்றது. மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்த சாஸ்திரிகள் பாலகனைப் பணிந்து வணங்கிய பின், மாற்றுவழி காட்ட அங்கே அந்நட்சத்திரம் இல்லை. குறித்த வேலையை திருப்தியோடு, குறிக்கப்பட்ட நேரத்தில் முடித்துவிட்டு நமக்கு நட்சத்திரம் பாடம் கற்பிக்கிறது.

**1. குறிப்பினால் உணர்த்தும் நட்சத்திரம் :** கண்டோர்க்கு நற்செய்தியை பேச்சுமின்றி வார்த்தையுமின்றி, ஆடம்பர சொல்லாடல் இன்றி குறிப்பினால் உணர்த்தியது. பிரியமானவர்களே, நாம் இன்று சந்திக்கும் நபர்களிடம் குறிப்பினால் உணர்த்தும் உண்மை என்ன? நம்முடைய கவலை தோய்ந்த முகமும், சந்தேகம் நிறைந்த கண்களும், பிறரின் முகத்தைச் சுளிக்கச் செய்யும் உலகத்துக்கொத்த வேஷமும் பிறருக்கு உணர்த்துவது என்ன?



வியாராவில் நடைபெற்ற கூடுகையில் ஞானஸ்நானம் பெற்ற மக்கள்

இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட, இரட்சிக்கப்பட்ட நாம் இரட்சிப்பின் சந்தோஷத்தையும், என் மீட்பர் உயிரோடிருக்கிறார் எனும் நிச்சயத்தையும் குறிப்பினால் உணர்த்துகிறோமா? எனது மீட்பர் மீண்டும் திரும்ப வருவார் என்கிற நமது விசுவாசத்தை குறிப்பினால் உணர்த்துகிறோமா? எத்தகைய இன்னல்கள் என்வாழ்வில் ஏற்பட்டாலும், என்கண்களினால் மாத்திரம் அவைகளை பார்ப்பேன். அவைகள் எனது ஆவிக்குறிய வாழ்வில் எத்தகைய தாக்குதல்களையும் ஏற்படுத்தாது என்கிற உண்மையை குறிப்பினால் பிறருக்கு அறிவிக்கிறோமா?

**2. மிகுந்த ஆனந்த சந்தோஷம் உண்டாக்கும் நட்சத்திரம் :** வழிதவறிய சாஸ்திரிகளுக்கு மீண்டும் நன்மையையே செய்யும் நட்சத்திரம். தேவன் குறித்த வேலையை செம்மையாய், தடைகளைத் தாண்டி முடித்திட்டது. பிரியமானவர்களை நாம் இன்று நம்முடைய செயலில் எப்படி இருக்கிறோம்? வழி தவறியவர்களும் நம் செயல்களால் மிகுந்த ஆனந்த் சந்தோஷமடைந்திருக்கிறார்களா? தொய்வின்றி, தடைகளைத்தாண்டி, தேவன் கொடுத்த வேலையில் தொடருகிறோமா? தாழ பறந்து வரும் பறவை உயர்ந்த முட்செடியில் மோதி கீழே விழுவதில்லை. மரத்தை குறைகூறுவதுமில்லை. அருகில் அமர்ந்து அழுவதில்லை. மாறாக, தான் பறக்கும் உயரத்தை அதிகமாகக்கித் தாண்டிச் சென்று மகிழ்கிறது. கடந்துபோகிறது. தேவனால் அருளப்பட்ட வேலை தடையின்றி செய்து முன்செல்ல, பறக்கும் உயரத்தை அதிகரிக்க தேவன் வல்லவராயிருக்கிறார். தேவப் பணியில் தொடர்ந்து, வழிதப்பியவரும் நம்மைக் கண்டு ஆனந்த சந்தோஷமடைய காரணமாவோமா?

**3. அதிகப் பிரசங்கித்தனமில்லாத நட்சத்திரம் :** குறிப்பால் உணர்த்தி, சந்தோஷம் கொடுத்து வழிகாட்டி, முன்சென்று, நின்ற நட்சத்திரம் சாஸ்திரிகள் பாலகனைப் பணிந்தபின் காணவில்லை. மாற்றுவழிகாட்டவும் நானே என அங்கிருக்கவில்லை. வேலை முடிந்த நிறைவில் பரம திருப்தி. பிரியமானவர்களே, தனக்கடாத வழக்கிலோ, வேலையிலோ தலையிடாதிருப்போம். கொடுத்தப்பணி மட்டும் சிறப்பாய் செய்து சிறந்திருப்போம். தேவன் வேறே போக்கை உண்டு பண்ண வல்லவர்.

புதிய ஏற்பாட்டிலிருந்து இன்னுமோர் நட்சத்திரத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரம் தன்இடத்தில், அமராமலும், கிடைத்த அல்லது கொடுக்கப்பட்ட வெளிச்சத்தைக் கொண்டு, முன் செல்லவும், வழிகாட்டவும் ஆசைப்பட்டு மார்க்கந்தப்பி, திசை மாறி, ஏனோதானோவென்று அலைந்து, தன் மரியாதையும் கெடுத்தும், பிறர் பின்பற்றவேண்டி மாதிரியின்றியும் வாழ்வதால் பயனில்லை. காரிருளே இறுதி கதி. பிரியமானவர்களே, நமக்கு கிருபையாய் கொடுக்கப்பட்டிருக்கும் வெளிச்சம் நாம் மார்க்கந்தப்பி அலைவதை உலகுக்கு வெளிச்சம் போட்டு காட்டிவிடும்.

இக்கிறிஸ்மஸ் காலத்தில் இவ்விரு நட்சத்திரங்களை நாம் மனதில் கொள்வோம். உயர, உன்னதத்தில் பிரகாசிக்கும் விண்மீனாய், வழிகாட்டி, முன் செல்லும் விண்மீனாய், நற்செய்தியை தோற்றக்குறிப்பால் உணர்த்தி, வழிதவறியோரையும் அரவணைத்து நடத்தி, கொடுக்கப்பட்ட வேலையில் திருப்தியோடு வெளிச்சமாயிக்க இந்த சிறப்பு மனமகிழ்வின் காலங்களில் தேவன் கிருபை செய்வாராக. தேவமகிமையும், சமாதானமும், பிரியமும் என்றும் நம்முடன் தங்கியிருப்பதாக! ஆமென்.

**Merry Christmas**

# இஷ்கண்டி என்ற கிராமத்தில் (வியாரா, குஜராத்)

# நாம் கட்டியுள்ள ஆலயம்











கடந்த 21-10-2022 அன்று இஷ்கண்டி என்ற கிராமத்தில் (வியாரா, குஜராத்) நாம் கட்டியுள்ள ஆலயத்தை நமது சகோதரர் **Mr. D. G.** செல்வக்குமார் மற்றும் **Mr. K.** கோயில்பிள்ளை அவர்கள், தேவனுடைய நாம மகிமைக்காக பிரதிஷ்டைப் பண்ணினார்கள். சுமார் 500 பேர் அமரக்கூடிய ஆலயம். ஆலயபிரதிஷ்டையில் அங்குள்ள விசுவாசிகள், சுற்றியுள்ள நமது விசுவாசிகள் மற்றும் இஷ்கண்டியிலுள்ள மற்ற மக்கள் என்று சுமார் 650 பேர் பங்கு பெற்று தேவனை மகிமைப்படுத்தினர். ஆலயபிரதிஷ்டை ஆராதனையில் சகோ. **D. G.** செல்வக்குமார் அவர்கள் செய்தி அளித்தார்கள். அனைத்து மக்களும் அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டனர். இங்குள்ள, மக்களில் இன்னும் சிலர் இயேசுவை அறியவில்லை. இவர்களுக்காக நமது ஜெபம் தேவைப்படுகிறது. இந்த ஆலயத்தை கட்டிக்கொடுக்க முன்வந்த பாளையங்கோட்டையிலுள்ள அன்பு சகோதரருக்கு நன்றி செலுத்துகிறோம். தேவன் அவர்களையும், குடும்பத்தினரையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!



இஷ்கண்டியில் ஆராதனை வேளை

## இஷ்கண்டி ஆலய பிரதிஷ்டை

தேவ நாம மகிமைக்கென்றும், விசுவாசிகளின் உபயோகத்திற்கென்றும் குஜராத் மாநிலம், டாங்ஸ் மாவட்டம் சுபிர் தாலுக்காவிலுள்ள இஷ்கண்டி கிராமத்தில் பரி.பேதுருவின் ஆலயம் 21 அக்டோபர் 2022 அன்று நமது இயக்க ஊழியர்களால் மங்கல படைப்பு செய்யப்பட்டது.

மூன்னூற்கும் அதிகமாக விசுவாசிகள் ஆராதிக்க ஆலயமின்றி மழைக்காலங்களில் அதிகம் சிரமப்பட்டார்கள். விசுவாசத்தோடு ஜெபத்தில் காத்திருந்தவர்களுக்கு மிக அழகான ஆலயம் கட்டித்தர முன்வந்த தேவபிள்ளைகள், நம் இயக்கத்தின் தேவப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல தோள் கொடுத்த பங்காளர்களுக்கும் நன்றி. தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசிர்வதிப்பாராக.

### வழி காட்டிய வெளிச்சம் :

21 அக்டோபர் 2022, மாலை இஷ்கண்டி கிராமம் எங்கும் களை கட்டியிருந்தது. விசுவாசிகள் அனைவரும் ஆராதனையை எதிர்பார்த்து வந்திருந்தினர். கூடிவரும் மக்களுக்கான அன்பின் விருந்தாக இரவு உணவு ஆயத்தமாக்கபட்டிருந்தது. அவ்வூரில் சற்று வசதியான சந்தோஷ்பாய் மட்டும் இன்னும் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு காரணம், மந்திரவாதியான அவனுடைய அம்மாவைத் தேடி அக்கம் பக்கத்திலுள்ள கிராமமக்கள் வருவதே ஆகும். சிற்சில சமயங்களில் நமக்கு எதிராகவும் அக்குடும்பம் செயல்பட்டு வந்தது.

அக்டோபர் 3ம் தேதி முழுப்பணித்தள பெண்கள் கூடுகைக்காக கூடி வந்திருந்த பெண்களிடம் ஆலயப் பிரதிஷ்டைக்காக ஜெபிக்கவும், இயலுவோர் உபவாச ஜெபம் ஏறெடுக்கவும் கேட்டிருந்தோம். இஷ்கண்டி கிராம பெண் விசுவாசிகள் 19,20 மற்றும் 21 தேதிகளில் மூன்று நாட்களாக தேவ மகிமை வெளிப்பட, தடை, எதிர்ப்பின்றி பிரதிஷ்டை ஆராதனை நடைபெற ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.

பிரதிஷ்டை ஆராதனை மாலை 6.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 7மணியளவில் மிகவும் பிரகாசமான வெளிச்சம் ஒன்று வேகமாக, ரயில் வண்டி வேகத்தில் நம் ஆலயத்தை நோக்கி தூரத்தில் இருந்து வர, பல பெரியோர்களும் சிறுவர்கள் அனைவரும் இதைப் பார்த்திருக்கிறார்கள். சந்தோஷ்பாயும் இப்பெரிய வேகமாகச் செல்லும் வெளிச்சத்தைக் கண்டு, அதன்பால் ஈர்க்கப்பட்டு அதனைப் பின் தொடர்ந்து ஓட, கண்கள் தெளிந்து பார்த்தார். ஆம்! சந்தோஷ்பாய் ஆலய கதவண்டையில் நின்று கொண்டிருந்தார். உள்ளே, நுழைய இடமில்லாததால் மண்டபத்திலே அமர்ந்து முழு ஆராதனையிலும் பங்கு பெற்றார். பக்கத்து கிராம உலியாபாய் அவ்வெளிச்சத்தை தன் அலைபேசியில் புகைப்படமெடுக்க முயற்சித்தும் முடியவில்லை.

சந்தோஷ்பாய் தன் எதிர்ப்பை கைவிட்டு, குடும்பத்தோடு 23ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் கலந்து கொண்டு கிறிஸ்மஸ் வரை தொடர்ந்து வருவதாக அறிவித்தார். கிறிஸ்மஸ் வரை மட்டுமல்ல, கிறிஸ்து அவர் உள்ளத்தில் பிறந்து, கிறிஸ்துவின் வருகை மட்டும் ஆலய ஆராதனையில் பங்கு கொள்ள ஜெபிப்போம்.


கன்ரோலி, குஜராத்தில் நடைபேற்ற கூடுகை


டோக்கர்டவா, குஜராத்தில் நடைபேற்ற கூடுகை

# அன்பின் வேண்டுகோள்

இந்த ஆண்டு கிறிஸ்மஸ் காலங்களில் பல்வேறு கிராமங்களில் நாம் நடத்த இருக்கும் கிறிஸ்மஸ் நிகழ்வுகள் மூலம் அதனைக்காண வரும் கிராம மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், இந்நிகழ்ச்சிகளை நடத்த ஆயத்தப்படும் ஊழியர்களுக்கும், நமது சபைவிசுவாசிகளுக்கும் தேவையான ஞானம், தேவகிருபை, உடல்நலம் கிடைக்க ஜெபியுங்கள். கிறிஸ்மஸ் நிகழ்வுகளை 10 இடங்களில் சுமார் 5000 பொதுமக்கள் கண்டுகளிப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளின் முடிவில் அனைவருக்கும் உணவு வழங்கவும், குடும்பத்திற்கு ஒரு வசனகாலண்டர், மற்றும் ஏழை எளியவர்களுக்கு கிறிஸ்மஸ் புதியஆடை வழங்கவும், சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு புதிய ஆடைகள் வழங்கவும், முதியவர்களுக்கும், ஏழை பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் போர்த்திக்கொள்ள ஏற்ற கம்பளி ஆடைகளும் வழங்கவேண்டியதுள்ளது. இதற்கான பொருளாதாரம் சந்திக்கப்படவும் தேவனுடைய நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள். பின்வரும் உதவிகளைச் செய்ய முன்வருபவர்கள் எங்களுக்கு தெரியப்படுங்கள். எங்கள் ஊழியர்கள் உங்களை சந்தித்து ஜெபத்துடன் அவைகளை பெற்றுக்கொள்வார்கள். டிசம்பர் மாதம் 10ம் நாளுக்குள் மக்கள் அளிக்கும் பங்குகளைப் பெற்று, 12ம் நாளில் பணித்தளத்திற்கு அனுப்பி, 20ம் தேதி முதல் பணித்தளத்தில் கிறிஸ்மஸ் நிகழ்சிகள் ஆரம்பிக்கப்படும்.

## நமது தேவைகள் :



1. குளிரைத்தாங்க ஏற்ற கம்பளி ஆடைகள்
2. ஏழைமக்களுக்கான புதிய ஆடைகள்
3. சிறுவர்களுக்கேற்ற புதிய ஆடைகள்
4. மராத்தி மொழியில் வேதாகமம் மற்றும் புதிய ஏற்பாடுகள்
5. மராத்தி, குஜராத்தி மற்றும் இந்தி மொழிகளில் காலண்டர்.

பணம் அனுப்புவோர் நமது வங்கி கணக்கின் மூலமாகவோ அல்லது **G Pay** மூலமாகவோ அல்லது நமது ஊழியர்கள் மூலமாகவும் அனுப்பலாம்.

"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று உரைத்த தேவன், உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**இம்மாத உபவாச ஜெபம் 28.12.2022 அன்று நமது அலுவலகத்தில் வைத்து நடைபெறும். பலர் தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்பி ஜெபம் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்கள். ஏற்றகாலங்களில் தேவன் நிறைவாய் உங்களை ஆசீர்வதிப்பார். தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்ப விரும்புகிறவர்கள் 8838261572 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். உங்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.**

**A/ C Name: Western India Mission**

| | | | |
|---|---|---|---|
| Bank: | Canara bank, | Bank: | Axies Bank, |
| Branch: | Vannarpettai, Tirunelveli | Branch: | KTC Nagar, Tirunelveli. |
| A/CNo: | 2952101007959 | A/C No: | 922010016879568 |
| IFSC Code: CNRB0002952 | | IFSC Code: UTIB0003601 | |

G Pay

Western India Mission

# ஜெபவிண்ணப்பங்கள்

- பொளலி புங்கட்டி (40) என்ற சகோதரி, இடுப்புப் பகுதியில் இருந்து கால்வரைக்கும் ஒருவிதமான எரிச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இவர்கள் புதிதாக சபையில் கலந்து கொள்கின்றனர். விடுதலைக்காக ஜெபிப்போம். ஜம்னி என்ற சகோதரிக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளவும் இடது கால் செயல்படமுடியாமல் இருக்கிறது. உடலில் எரிச்சல் இருக்கிறது.
- அசோக் தலாண்டி மற்றும் இவரது மனைவி, பூர்கியைச் சேர்ந்தவர்கள் திருமணமாகி 2வருடம் குழந்தையில்லாமல் உள்ளனர். மேலும், இவர்கள் இயேசுவின் சாட்சிகளைக் கேள்விப்பட்டு இயேசுவே மெய்யான தெய்வம் என விசுவாசித்து தானாகவே சபையில் வந்து சேர்ந்துள்ளார். அசோக் என்ற இவரின் சகோதரர் இவருக்கு எதிர்ப்பாக உள்ளார். தற்போது இவர் தனது மனைவியுடன் வேறொரு விசுவாசியின் வீட்டில் உள்ளார். சீக்கிரத்தில் இவர்கள் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளவும், எதிர்ப்புகள் மாறவும் சொந்த வீட்டிற்கு திரும்பிச் செல்லவும் நாம் ஜெபிப்போம்.
- இன்னும் 5க்கும் மேற்பட்ட குடும்பத்தினர், தாமாகவே இயேசுவின் சாட்சிகளைக் கேள்விப்பட்டு விசுவாசித்தில் வர விரும்புவதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். அநேகர் நமது விசுவாசிகளிடம் கூறி தங்களுக்காவும் இரகசியமாய் ஜெபிக்க கேட்டுக் கொள்கிறார்கள். அவர்களை தடுக்கும் தடை கற்கள் தகர்க்கப்பட நாம் ஜெபிப்போம். பூர்கி கிராமம் முழவதும் இரட்சிக்கப்பட்டு அதை சுற்றியுள்ள கிராமங்களையும் தேவனுக்குள் வழிநடத்த ஜெபிப்போம்.
- உடெரா என்னும் கிரமத்தைச் சேர்ந்த சஞ்சு காவ்டே (35) பைத்தியமாக அவ்வப்போது மாறி, வீட்டைவிட்டு வெளியேறுகிறார், சுகம்பெற ஜெபிப்போம். எட்டாப்பள்ளியைச் சார்ந்த சந்து (30) என்பவரும் பைத்தியம்போல பேசுகிறார். சுகத்திற்காக அலைந்து கொண்டிருக்கிறார். இயேசுவிடம் வந்து ஜெபியுங்கள். தேவனுடைய கிருபையால் சுகம் கிடைக்கும் என அறிவுறுத்தியிருக்கிறோம். இவர் ஆத்துமா இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
- பிம்பிரி பகுதியைச் சேர்ந்த பகவான் என்பவர் நீண்ட நாட்களாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். நமது ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் ஜெபம் கேட்ட ஆண்டவர், இவருக்கு விடுதலையை அருளிச்செய்தார். இவர் குடும்பமாக ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும், ஆராதனையில் பங்கு கொள்ளவும் ஜெபியுங்கள்.
- அக்கோலி என்ற புதிய கிராமத்தில், கல்பனா மற்றும் லதா என்ற இரண்டுபேர் தங்கள் குடும்பத்துடன் இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆராதனைக்கு வருவதற்கு இவர்களது குடும்ப அங்கத்தினர்கள் மூலம் தடைகள் ஏற்படுகிறது. தடைகளை தேவன் தகற்க ஜெபியுங்கள்.
- நமது ஞாயிறுபள்ளியில் தவறாமல் கலந்து கொள்ளுகிற சோனல் என்ற சகோதரிக்கு இளம் வயது முதல் சர்க்கரை வியாதி உள்ளது. தாய்தந்தையர் எப்பொழுதும் குடியும் கும்மாளமும் மாயிருக்கின்றனர். இந்த சகோதரிக்காக, குடும்பத்திற்காக ஜெபியுங்கள்.

அன்பரின் பணியில்,
**Dr.G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**

உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:



| | | | |
|---|---|---|---|
| **Dr.** ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. ஃபெலிக்ஸ் | 9600992654 |
| சகோ. கோயில்பிள்ளை | 9159827209 | | |

**Our Address :**
**Western India Mission**, C-98, East Rahmath Nagar, Tirunelveli – 627 011.
**வெஸ்டன் இந்தியா மிஷன் சி-98, கிழக்கு ரஹ்மத் நகர், திருநெல்வேலி 627 011.**
இணையதள முகவரி : https://westernindiamission.com

*DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182*